Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 13

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 11 ஜூலகம் 12 வியாழக்கிழமை (23-2-67

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# முன்னணியில் காங்கிரஸ்: கேரளத்தில் இடதுசாரி

## வெற்றிப்பாதையில் இந்திரா, சுவர்ண்சிங்; நிதிமந்திரி தோல்வி

### கடைசி செய்தி: தமிழ்நாட்டில் முதல்முடிவு

### சுதந்திராவுக்கு; அனந்தநாயகி தோல்வி

புதுடில்லி, பெப் 22

தமிழ்நாட்டு சட்டசபையின் முதலாவது முடிவு இன்று பிற்பகல்சுமார் 4 மணிக்கு வெளியானது. சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. எச். வி. காண்டேகே காங்கிரஸ் அபேட்சகர் திருமதி அனந்த நாயகியை 2000-க்கும அதிகமான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார்.

இந்தியப் பொதுத் தேர்தல் இன்று பகல் வரை வெளியான முடிவுகளின்படி கேரளா தவிர்ந்த மற்றைய ராஜ்யங்களில் காங்கிரஸ் கட்சியே அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. கேரளத்தில் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்துள்ள இடது சாரி ஐக்கிய முன்னணி புதிய அரசாங்கம் அமைப்பதற்கான பெரும் பான்மைப் பலம் பெற்றிருக்கிறது.

### இந்திராகாந்தி

உத்தரப்பிரதேசத்தில் ராய்பரேலித் தொகுதியில் போட்டியிட்ட இந்தியப்பிரதமர்திருமதி இந்திராகாந்தி [இன்று நண்பகல் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி] பத்தாயிரத்துக்குமதிகமான வாக்குகளால் வெற்றிப்பாதையில்சென்றுகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய யூனியனின் பிரதேசமான திரிபுராவில் மீண்டும் காங்கிரஸ்கட்சி ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இங்கு 22 தொகுதிகளைக் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

### கேரளம்

கேரளத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி [இன்று நண்பகல் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி] 69 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸ் 7 ஸ்தானங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது.

1956ல் கேரளம் அமைக்கப்பட்டது. 1959ல்மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அரசாங்கம் பதவியிழந்தது. இதன்பின்னர் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட்டு இடைத் தேர்தல்வரை நீடித்தது. இரண்டுதடவைகள் உப தேர்தல்கள் நடைபெற்றன.

### ஜெய்பூர்மகாராணி தோல்வி

ஜெய்பூர் மகாராணி காயத்ரிதேவி ராஜஸ்தானில் மல்புரா சட்டசபைத் தொகுதியில் தற்போதைய சுகாதார மந்திரியினல் 9000-க்கும் அதிகமானவாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

### நிதிமந்திரி தோல்வி

இந்திய மத்திய நிதிமந்திரி சசீந்திர சௌத்திரி மேற்கு வங்காளத்தில் ஆரம்பாதொகுதியில் சுமார் 20,000 வாக்குகளால் தோல்வியடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுவர்ண்சிங் வெற்றி

பஞ்சாபில்ஜலந்தர்தொகுதியில் போட்டியிட்ட இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் 12,000-க்கும் அதிக வாக்குகளால் வெற்றிபெற்றிருக்கிறார். சரியான முடிவு அறிவிக்கப்படவில்லை.

பஞ்சாப் மத்தியபிரதேசத்தில் பல மந்திரிகள் தோல்வியடைந்துள்ளனர். மத்தியபிரதேசத்தில் ஏழு மந்திரிகள் பதவி இழந்துள்ளனர். நான்கு மந்திரிகள் வெற்றிபெற்றுள்ளனர்.

### முதன் மந்திரி வெற்றி

ராஜஸ்தான்முதன் மந்திரி, மத்தியபிரதேசமுதன்மந்திரி ஹரியானா முதன்மந்திரிஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர். பஞ்சாப்பில் சுயேச்சையாகப் போட்டியிட்ட பட்டியாலா மகாராஜா வெற்றிபெற்றிருக்கிறார்.



### கேரள இடதுசாரி தலைவர்கள் வெற்றி

கேரளத்தில் இடதுசாரித் தலைவர்கள் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட், எம். என். கோவிந்தநாயர், தாமோதரன் கோட்டி, பி. வெலிங்டன், பி. எம். முகமது கோயா, சையத்முகமது தங்கல் ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

---

நாரந்தனை, புதன்

வங்களாச்சந்தியை நவீனமாக்கும்வேலையில்வேலணைக் கிராமசபையினர் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

## லோகசபைமுடிவுகள்

இன்று பிற்பகல்பதினெரு லோகசபை [இந்தியபார்லிமெண்ட்] ஸ்தானங்களின் முடிவுகளே வெளிவந்தன. இவற்றில் காங்கிரஸ் ஒன்பதில் வெற்றிபெற்றுள்ளது. ஜனசங் இரண்டு ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

## தமிழ்நாட்டு முடிவுகள்

தமிழ் நாட்டுத்தேர்தலில் எட்டு மாவட்டங்களில் இன்று வாக்குகள் எண்ணப்பட்ட பொழுதிலும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை எந்தந்தொகுதிமுடிவும் வெளியாகவில்லை. 234 அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்டசபையில் ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு நடைபெறவில்லை. சுதந்திரா அபேட்சகர் காலமானதைத்தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது,





திருச்சியில் ஏற்பட்ட சிறு சிறு சம்பவங்களைத்தொடர்ந்து நகரசபை எல்லைக்குள் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றுக்கு தடைவிதிக்கப்பட்டது.

### சென்னையில் பரபரப்பு

சென்னை நகரம் இன்று காலையில் பெரும்பரபரப்புக்குள்ளானது. தேர்தல் முடிவுகளை அறிவதில்மக்கள் சந்திக்குச்சந்தி குழுமியிருந்தனர். மூலைமுடுக்குகளில் எல்லாம் மக்கள் கூட்டங்கூட்டமாக நின்றனர். தமிழ்நாட்டுத்தேர்தல் முடிவுகள் இன்றுமாலைவரை அறிவிக்கப்படவில்லை.

## எம். ஜி. ஆர். வெற்றி பெறுவார்?

தி. மு. க. அபேட்சகர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறுவார் என்று சென்னையில் ஹேஸ்யம் கூறப்பட்டது. இவரது தொகுதி வாக்குகள் நாளை வியாழக்கிழமை காலையில் எண்ணப்படும்.

தி. மு. க. தலைவர் திரு. சி.என்.அண்ணாத்துரை போட்டியிட்ட தென் சென்னை தொகுதி உட்பட லோகசபைத் தொகுதி முடிவுகள் 25-ம்திகதிதான் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

### காமராஜர் தொகுதி

திரு. கு. காமராஜர், திரு. எம். பக்தவத்சலம், திரு.மா பொ.சி, சபாநாயகர் திரு. செல்லபாண்டியன், மந்திரிகளான திரு.சுக்தன், திரு இராமையா, மன்றுடியார் ஆகியோர் போட்டியிட்ட தொகுதிகளின் முடிவுகள் இன்று வெளியாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது.



யாழ்ப்பாணம், வியா.

இலங்கை தமிழரசுக்கட்சித் தெல்லிப்பழைக் கிளையின் மூன்ருவது ஆண்டு விழாவும், பொதுக்கூட்டமும் இன்று தெல்லிப்பழை வீமன்காமம் சந்தைமைதானத்தில் திரு.வ. சரவணமுத்து தலைமையில் நடைபெறும். தமிழரசுத் தலைவர் திரு. எஸ் ஜே. வி.செல்வநாயகம், அமைச்சர் திருச்செல்வம் உட்படபலஎம்.பி.க்களும் கலந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் நல்ல காரியம் செய்வது பிறருக்காக அல்ல. நமது அமைதி, இன்பம், உயர்வு இவற்றுக்காகவே. பட்டினி கிடக்கும் ஒரு பிச்சைக் காரருக்கு உதவும்போது நாம் நமது உள்ளத்து உணர்ச்சிக்கே நிவாரணம் தேடிக் கொள்ளுகிறோம்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹு மாசி மீ 11 (23-2-67)


## பிரதமரின் விளக்கம்

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதா பெரும் 'சிக்கல்' எதையும் கிளப்பாமல் 40 அதிகப்படியானவாக்குகளால் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிவிட்டது.

'நாடற்றவர்' என்ற இரண்டுங்கெட்ட நிலையில் ஒருபிரிவு மக்கள்தொடர்ந்தும் இங்கு இராமல் ஏதாவது ஒரு நாட்டுப் பிரஜை என்ற ஓர் அந்தஸ்தை இந்த மசோதா ஏற்படுத்த வழிவகுக்குமென்று எதிர் பார்ப்போம். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் 'பின்னர் ஆராய்வது' எனஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஒன்றரை லட்சம் நாடற்றவரின் நிலை தெளிவாகாதவரை 'நாடற்றவர்' பிரச்னை முற்றாக நீங்கிவிடுமெனக் கருதுவதற்கு இடமில்லை.

இந்த மசோதாவில் சர்ச்சைக்குரிய விஷயமான 'கட்டாயநாடுகடத்தல்' என்பதற்கு இடமில்லையென்றும் கட்டாயமாக நாடுகடத்துவது, இந்த ஒப்பந்தம் எந்த நோக்கத்துடன் செய்து கொள்ளப்பட்டதோ அதற்கு முற்றிலும் மாறானதென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். இதுபலருக்கும் ஆறுதலளிப்பதாகும். கட்டாய நாடுகடத்தல் என்றாலும் இங்கிருந்து செல்லும் ஒவ்வொரு இந்தியரும் ஆளுக்குநான் காயிரம் ரூபா வீதம் கொண்டு செல்வதற்கு அனுமதியளித்தேயாக வேண்டும். இதன்படி ஐந்தேகால் லட்சம் பேரும் செல்வதானால் கோடிக் கணக்கான ரூபாய் இங்கிருந்து இந்தியா போய்ச் சேரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதை இலங்கை தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பது பிரதமரின் ஒரு கருத்து. ஐந்தேகால் லட்சம்பேரும் இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்து கொண்டபின்னர் அவர்களைக் கட்டாயமாக அனுப்பவேண்டிய அவசியமும் ஏற்படாது. வேறுநாட்டுப்பிரஜைகள் இங்கு தற்காலிக வாசகால பர்மிட் பெற்றே வசிக்கவேண்டும். அந்தப் பர்மிட் காலாவதியானதும் புதுப்பிக்க மறுத்தால் அவர்கள் அதற்குமேலும் இங்கிருக்கமுடியாது. அவர்களைக்கட்டாயமாகக் கப்பலில் ஏற்றி அனுப்பாவிடினும் அவர்களாகவே இங்கிருந்து போகத்தான் வேண்டும். கட்டாயநாடு கடத்தலுக்கு அவசியமில்லையென்று கூறியதன் கருத்து இதுவாகவுமிருக்கலாம். எது எப்படியிருப்பினும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் தாமாகச் சென்றாலும், கட்டாயமாக அனுப்பப்பட்டாலும் இங்கிருந்து கோடிக்கணக்கானரூபாய் வெளியே செல்ல வேண்டி நேரிடும். உணவுக்கே பணம் இல்லாதிருக்கையில் இதை எப்படித்தாங்க முடியுமென்பதும் இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது சுலபமல்லவென்பதும் பிரதமர் மனதில் எழுந்துள்ள சந்தேகம்.

இலங்கை-இந்தியர் பிரச்னை மனிதர்களைப்பற்றிய பிரச்னையென்றும் ஆகவே இதை மனிதாபிமானத்துடன்தான் தீர்க்கவேண்டுமென்றும் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயகா பன்முறையும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அவர் மனைவியாரும் எதிர்க் கட்சித்தலைவியாருமான ஸ்ரீமதிசிறிமா, கட்டாயநாடு கடத்தலை வற்புறுத்தி மசோதாவுக்கு மாறாக வாக்களித்துள்ளார். கட்டாய நாடுகடத்தல் நிச்சயம் மனிதாபிமானமுடையதென்று அவரும் கூடக் கூறமுடியாது. இது நாம் ஏற்கெனவே கூறியபடி கட்சி விஷயமோ அல்லது இன விஷயமோ அல்ல. இது மனிதப்பிரச்னை. இதை மனிதாபிமானத்துடன் அமுல் நடத்துவதில்தான் இதன் வெற்றியும் தங்கியுள்ளது. இவ்விஷயத்தில் இரு அரசாங்கங்கள் [illegible] எதிர்க்கட்சியினரும் ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

# ஐயாறன் எழுதுவது

திருச்சி வானொலியில் இரு அமெரிக்கர் இந்தியத் தேர்தலைப் பற்றி சம்பாஷித்தார்களாம். காங்கிரஸ் போன்ற ஒரு ஸ்தாபனத்தின் மீது பொது மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை இருக்கலாமென்றும், ஆனால் சில தலைவர்கள் மீதுதான் பழிவாங்க வேண்டுமென்று இருக்கிறார்களென்றும் அதில் ஒருவர் தெரிவித்தாராம்.

இந்தியத்தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. சில மந்திரிகள் தோற்கிறார்கள். சிலர் ஜெயிக்கிறார்கள். இதைப்பற்றி இந்நிலையில் ஒன்றும் கூறுவதற்கில்லை.

ஆனால் கேரளத்தில் இடது கம்யூனிஸ்ட் கட்சிக்கு பெரும் வெற்றி. கூட்டு முன்னணி ஆட்சி தான் ஏற்படுவதாக இருக்கலாம். இது எதிர்பார்க்கப்பட்டதே. இராஜஸ்தானில் காங்கிரஸ் வெற்றி பெறுவது சந்தேகமென்று பிரதமரே முன்னர் பகிரங்கமாகக் கூறினார். ஆனால் இதற்கு நேர்மாறாக, காங்கிரஸ் அங்கு வென்று வருகிறது. சுதந்திரா கட்சித் தலைவரான ராணி காயத்ரி தேவியும் கூட தோற்று விட்டார். அவரது கட்சிக்கும் அங்கு பெருந் தோல்வி! ஏன்? எப்படி? மக்கள் மனதை யார் அறிவர்?

ஃ

உலகமனைத்தும் இன்று இத் தேர்தல் முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றது. இத்தேர்தல் தான் இந்தியாவின் கடைசி தேர்தலாக இருக்குமென்றும், இனியெல்லாம் சீரழிந்து சர்வாதிகார, இராணுவ ஆட்சி ஏற்படுமென்றும் சிலர் சாகுருவி சோதிடம் கூறுகின்றார்களாம். மக்கள் தீர்ப்பே மகேசுவரன் தீர்ப்பு. என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

ஃ

கொழும்பு கொட்டாஞ்சேனை மாரியம்மன்கோவில் மிகப் புகழ்பெற்றது. வணிக வைசியகுல மக்களின் நிர்வாகத்தில் நடக்கும் இக் கோவிலுக்கு பௌத்தரான பிரதமர் டட்லி சேனநாயக்கா வந்து மாசிமக மகோற்சவத்தை ஆரம்பித்து வைத்துப் பேசியுள்ளார். சாதி, மத, பேதமின்றிச் சகல மக்களும் ஒன்றுகூடி வழிபாடு செய்யும் இடமாக இந்த ஆலயம் திகழ்வது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறிவிட்டு, இனப்பாகுபாடு இன்றி எல்லோரையும் ஒன்றுபடுத்தும் பணி தேசிய அரசாங்கத்தின் தலைவன் என்ற முறையில் தம்மீது சுமத்தப்பட்டிருப்பதாயும் அப்பணியை நிறைவேற்ற எல்லோருடைய ஆதரவும் தமக்குத் தேவையென்றும்கூறி அங்கு வழிபட்டுள்ளார்.

முன்னர் ஒருசமயம் ஜிந்துப்பிட்டி [ஜயந்திநகர்] ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சகஸ்ரநாம அர்ச்சனை நடக்கையில் சுமார் ஒரு மணிநேரத்துக்குமேல் சந்நிதானத்தில் நட்டமே நின்று வழிபட்டார் திரு. டட்லி.

இலங்கையிலே எல்லா மக்களையும் சரிசமமாக மதித்து ஒற்றுமைப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்ற அந்தப் பராசக்தியும், அவரது பக்த கோடிகளும் உதவுவரென்றே நம்புவோம். அவரது இந்த நல்ல பிரார்த்தனை வீண்போக முடியாது.

ஃ

பரவும் பரிசொன்றறியேன் நான் பண்டே உம்மைப் பயிலாதேன், இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினையமாட்டேன் நான், கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை, அரவந்திரைக் காவிரிக்கோட்டத்து ஐயாறுடைய அடிகேளோ!

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

ஃ

[கரவின்றி வருகின்ற நீர்ப்பெருக்கு கமுகங்குலையை விழுங்க தென்னை மரங்களின் குலைக்கீழ் உள்ள கரும்பாலைகளின் ஓசையோடே கூடி ஒலிக்கின்ற அலைகளையுடைய காவிரியாற்றங்கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள், யான் உம்மைத் துதிக்கும் முறையை இயற்கையில் சிறிதும் அறியாதேன் ஆதலின் முன்னமே உம்பால் வந்து வழிபடாதொழிந்தேன், இரவும் பகலும் உம்மையே நினைவேன். என்றாலும் அழுந்த நினையமாட்டேன்: ஓலம்!]

## யாழ் மாநகரசபை

### சோலைவரி நிலுவை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதியிலிருந்து மாநகரசபைக்கு சோலைவரிப்பணமாக சுமார் 7 லட்சம்ரூபா பொதுமக்களிடமிருந்து அறவிடப்படவேண்டியிருப்பதாகவும், வரி வசூலிப்பதோடு மட்டும் நில்லாது உடனடியாக நடுக்கட்டு வேலைகளையும் செய்யும்படியும் யாழ்ப்பாணம் மாநகரசபைக் கணக்காளர் சகல நடுக்கட்டு உத்தியோகத்தர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

சோலைவரி நிலுவைப் பணத்தை அறவிடச்செய்கையில் நிலுவைப் பணத்தைப் பொதுமக்கள் உடனடியாகச் செலுத்தாவிட்டால் அவர்களுக்கு ஒருநாள் மேலதிக அவகாசம் கொடுக்கும்படியும், அந்த அவகாச நேரத்திலும் பணத்தை அவர்கள் கட்டாவிட்டால், மறுநாளே அவ்வீட்டிலுள்ள அசைவுள்ள ஆதனங்களுக்கு நடுக்கட்டு வேலைகளைச் செய்து, கைப்பற்றிய பொருட்களை மாநகரசபைப் பொதுக்களஞ்சிய காப்பாளரிடம் ஒப்படைக்கும்படியும் இச்சுற்றுநிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது. ந. நி.

## கீழைத்தேச நாடுகளில் வெளியான

# முதலாவது தமிழ் அச்சு நூல்

## பிபிலிய வேதத்தின் 250-வது ஆண்டுவிழா

பிபிலிய வேதாகமத்தின் [புதிய ஏற்பாடு] முதலாவது தமிழ் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்ட 250-வது ஆண்டு அடுத்தவாரம் சென்னையில் கொண்டாடப்படுகிறது. இம் மொழி பெயர்ப்பு வெளியீட்டில் வேறொரு பெரிய முக்கியத்துவம் இருக்கின்றது. அது என்னவென்றால், ஒரு கீழத்தேச மொழியில் வெளிவந்தபுதிய ஏற்பாட்டின் முதலாவது மொழி பெயர்ப்பு அதுவேதான்.

அச்சிடப்பட்ட புத்தகம் ஒன்று கீழத்தேசங்களில் முதன்முதலாக வெளியானது தமிழ்மொழியில்தான் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத் தமிழ் நூல் 1577-ம் ஆண்டில் கேரளத்திலுள்ள கொல்லம் என்னுமிடத்தில் கிறிஸ்து மத தூதுவர்களால் வெளியிடப்பட்டது. ஏழு வருடம் கழித்து வெளியான இன்னொரு தமிழ்நூலை இன்றும் யாழ்ப்பாண பொதுஜன நூல்நிலையத்தில் காணலாம்.

புதிய ஏற்பாட்டை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்த சீகன் பால்க் என்ற ஜெர்மானிய பாதிரியார் 1706-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் ஒரு பெரிய தமிழறிஞர். இந்திய மக்களின் மதக் கோட்பாடுகள் பற்றியும் பழக்கவழக்கங்கள் பற்றியும் அவர் இரு பெரிய நூல்களை எழுதியுள்ளார். வேறு சிறிய நூல்களையும் அவர் எழுதினார். ஒன்று குறிப்புகளுடன கூடிய தமிழ் அற நூல்களின் தொகுப்பு. இன்னொன்று, லத்தீன் மொழியில் தமிழ் இலக்கணம்.

சீகன்பால்க் புதிய ஏற்பாட்டின் தமிழ் மொழி பெயர்ப்பை 1711-இல் எழுதிமுடித்துவிட்டார். ஆனால் அக்காலத்தில் எழுதுவது சுலபம், அச்சிட்டு வெளியிடுவது கடினம். [illegible] அவரு[illegible] அச்சுக்கூடத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். இந்தியாவுக்கு வரும் வழியில் அவருடைய அச்சுக்கூட அதிபரும் இறந்துவிட்டார். கடைசியில் விஷயம் ஒப்பேறிவரும் சமயத்தில் அச்சுகள் மிகப் பெரிதாய்விட்டதால் அச்சிடும் கடதாசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இந் நூல் 1714-ம் ஆண்டிலும் 1715-ம் ஆண்டிலும் பாகம் பாகமாக வெளியிடப்பட்டது.

சீகன்பால்க் பெரும்பாலும் கிராமத்து மக்களுக்கே எழுதினார். ஆதலினால் அவருடைய தமிழ் நடை கொச்சைத் தமிழ் நடையாயிருந்தது. அவருடைய கையெழுத்துப் பிரதியிலும் சில விசித்திரமான போக்குகள் காணப்பட்டன. வீரமாமுனிவர் என்ற கொன்ஸ்டன்டைன் பெஸ்கி பாதிரியின் சீர்திருத்தங்களுக்கு முன்பிருந்தஎழுத்து முறைகளைப் பின்பற்றியே சீகன்பால்க் எழுதினார். மெய்யெழுத்துக்களுக்கு மேல் குற்றில்லை. ஒற்றைக் கொம்புக்கும் இரட்டைக் கொம்புக்கும் பதிலாக ஒற்றைக் கொம்பே வழக்கில் இருந்தது. ரகரத்துக்கு கீழ்க்கோடு இல்லை.

வீரமாமுனிவருக்கு முன் 'மரம்', 'மாம' என்று எழுதப்பட்டது. 'நேசம்', 'போவது' என்பன 'நெசம்' 'பொவது' என்று எழுதப்பட்டன. இப்படியே சீகன் பால்க்குவிலும் உள்ளன. எழுத்துக்களும் அச்சுக்களும் மிகவும் முரடாயிருந்தன. இந்த நிலைமை கடந்த நூற்றாண்டின் மத்தியகாலம் வரை இருந்தது.

ஆயினும் சீகன்பால்க்கின் முயற்சி மிகவும் மெச்சத்தக்கது. ஏனென்றால் அவருடைய முயற்சி முதல் முயற்சி. இரண்டாவது அவர் அதைத் தன்னந்தனியாக செய்து முடித்தார். சீகன்பால்கிக்குப்பின் வேதாகமத்தின் ஆறு முழுப் பதிப்புகளும் புதிய ஏற்பாட்டின் ஏழு பதிப்புகளும் வெளிவந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் முந்திய பதிப்புகளைவிட இலக்கண இலக்கிய நடையில் சிறந்தனவாய் உள்ளன.

மேற்கூறப்பட்ட ஆண்டு விழாவில் முக்கியமான நிகழ்ச்சி அர்ச். கிறிஸ்தோபர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும் ஒரு பொதுக் கூட்டமாகும். இதில்யோர்க் நகர அதிமேற்றிராணியார் பிரதம பேச்சாளர்.

யாழ்ப்பாணம் மேற்றிராணியார் வண. சபாபதி குலேந்திரன் அவர்கள் எழுதிய தமிழ் வேதாகம வரலாற்றை அவர் உத்தியோக பூர்வமாக வெளியிடுவார்.

### ஞானோபதேச வகுப்பு

பண்டத்தரிப்பு, புதன்

யாழ். ஞானோபதேச நடு நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விவிலிய ஞானோபதேச வகுப்பு தொடர்ந்து போயா தினங்களில் நடைபெறுகிறது. இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும், அச்சுவேலிபுனித திரேசா பாடசாலையிலும் யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியிலும் இவ்வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

### வொறல் சுகவீனம்

கிங்ஸ்டன், பெப். 22

முன்னாள் மேற்கிந்திய கிரிக்கெட்காப்டனும்பிரபல துடுப்படி வீரருமானபிறுங்க் வொறல் கடுமையான சுகவீனம் அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### பாடசாலை பஸ் சேவை

சங்கானை, புதன்

பாடசாலை மாணவர்களுக்கான விசேஷ பஸ்சேவை மார்ச் முதலாந்தேதியிலிருந்து சித்தங்கேணிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம்வரை ஆரம்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ண டெலிவிஷனில் இலங்கைக் காட்சிகள்

லண்டன், பெப். 22

பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் இவ்வருட முடிவில் வர்ண டெலிவிஷன் சேவையை ஆரம்பிக்கவிருக்கின்றது. ஆரம்ப வர்ண டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் இலங்கையின் இயற்கை வனப்புமிக்க காட்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

ஆசியாவில் குறிப்பாக தூரகிழக்கில் இயற்கை வனப்புமிக்க ரம்மியமான காட்சிகளை படம்பிடிப்பதற்கு வர்ண டெலிவிஷன் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் திட்டமிட்டுவருவதாக பி. பி. ஸி. அதிகாரி ஒருவரான திரு. ரொட்ரிக்கோ கூறினர். 27 வயதுடைய இளைஞரான திரு. ரொட்ரிக் கொழும்பில் பிறந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

''இலங்கை சம்பந்தமாக மூன்று நிகழ்ச்சிகளுக்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. இவை இனித்தான் படம் பிடிக்கப்படவிருக்கின்றன. இவற்றில் இரண்டு விபரணைப்படங்கள், ஒன்று இலங்கையின் மீன்பிடித் தொழிலையும், மற்றது இலங்கையில் கிராம வாழ்க்கையையும் சித்தரிப்பதாக இருக்கும்'' என்று திரு. ரொட்ரிக்கோ கூறினர்.

## சுஹர்ட்டோ—நசூதியான் இரகசிய ஆலோசனை

ஜாகர்த்தா, பெப். 22

இந்தோனேஷிய இராணுவத் தலைவர் ஜெனரல் சுஹார்ட்டோ நேற்று நசூதியானுடன் சுமார் 3 மணி நேரம் வரை இரகசியப் பேச்சுக்கள் நடத்தினர்.

அதிபர் சுகர்ணோவைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து இரண்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தியதாகத் தெரியவருகின்றது.

இந்த ஆலோசனைக்குப் பின்னர் ஜெனரல் சுஹார்ட்டோ முப்படைத் தலைவர்களையும் சந்தித்தார்.

## ஏற்றுமதியாகும் வீடுகள்

லண்டன், பெப். 22

பிரிட்டனில் தொழிற்சாலையில் வைத்து நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் இப்பொழுது உலகம் பூராவும் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன. கல் சாந்தைக் கொண்டு நிர்மாணிக்கப்படும் சாதாரண வீடுகளின் உறுதியும், அதேகால பாவனையும் உடையன இவை. மின்சார அமைப்புகள் பொருத்தப்பட்டே இவ்வீடுகள் பகுதிபகுதியாக தொழிற்சாலையிலிருந்து வெளியாகின்றன. கழிவு நீர்க் குழாய்கள், உஷ்ண வாயு அமைப்புகள் வீட்டின் நடுப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. காரியாலங்கள், ஹோட்டல்கள், மற்றும் கட்டிட பாவனைக்கு இந்த விடுகளை உபயோகிக்கலாம்.

## பிரிட்டனில் பயிற்சிபெறும் இலங்கையர்

லண்டன், பெப். 22

17 நாடுகளைச் சேர்ந்த 18 கணக்காளர்கள் தற்சமயம் பிரிட்டனில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிவருகிறார்கள். கணக்காய்வுத்துறையில் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்புகள் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் ஆதரவின்கீழ் நடைபெறுகிறது. இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி வரும் கணக்காளர்களில் ஒருவர் இலங்கையர். கொழும்பைச் சேர்ந்த திரு. டி. சாம்பசிவம் தேயிலைக் கட்டுப்பாட்டு இலாகாவில் கணக்காளராகக் கடமையாற்றுகிறார்.

## ஜமைக்கா தேர்தல்

கிங்ஸ்டன், பெப். 22

சுதந்திரம் பெற்ற பின்னர் முதலாவது பொதுத் தேர்தல் ஜமைக்கா தீவில் நடைபெற்றது. சில சிறு சிறு சம்பவங்களைத் தவிர தேர்தல் அமைதியாக நடந்ததாக அறிவிக்கப்பட்டது.

## ''ஒப்பந்தத்தை உருவாக்குக''

ஜெனிவா, பெப். 22

அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடை செய்யும் ஒப்பந்தத்தை உருவாக்குவதில் தாமதம் மேற்கொள்ள வேண்டாமென்று அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸனும் ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்டும் ஜெனிவா படைக் குறைப்பு மகாநாட்டுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சரசாலை கொலை

### மாஜிஸ்திரேட் விசாரணை

சாவகச்சேரி, புதன்

சரசாலையில் நடந்த கொலை சம்பந்தமாக, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் ஸ்தலத்தில் விசாரணை நடாத்தினர். பண்ணைகத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை கத்தியால் குத்தப்பட்டு ஸ்தலத்திலே சில தினங்களுக்குமுன் மாண்டார். கே. தர்மலிங்கம், எஸ். கார்த்திகேசு, என். சிவப்பிரகாசம் ஆகிய மூன்று சாட்சிகளையும் பொலிஸார் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்திரேட் சாட்சியங்களை விசாரணை செய்தபின் செல்லத்துரை பேரம்பலம் என்ற சந்தேகநபரை கைது செய்யுமாறு மாஜிஸ்திரேட் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## தற்கொலை

கொடிகாமம், புதன்

மிருசுவிலைச் சேர்ந்த தொம்மை அந்தோனி [40 வயது] நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி கே. திரவியநாயகம் தீர்ப்பளித்தார்.

## ஆசிரியர் சேவை நீடிப்பு

புன்னாலைக்கட்டுவன், புதன்

55 வயதுக்குமேல் சேவையிலிருக்கத் தகுதியற்றவர் எனக் கருதப்பட்ட ஒரு தமிழ்த் தலைமையாசிரியர் பகிரங்கசேவை ஆணைக்குழுவுக்கு முறையீடுசெய்ததன் விளைவாக அவருடைய பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## சந்தேகநபர் சரண்

யாழ்ப்பாணம், வியா

ஆனைக்கோட்டையில் அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின் காரணமாகப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த கணபதிப்பிள்ளை அன்னலிங்கம் என்பவர் ஒரு வாரத்திற்குப் பின்னர் நேற்றைய தினம் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் சரணடைந்தார்.

இம்மாதம் 13ந் தேதி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். சோமசுந்தரம் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்தாரென்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர் பொலிஸாரால் தேடப்பட்டுவந்தார். சந்தேகநபரான கணபதிப்பிள்ளை அன்னலிங்கத்தை ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். [நநி]

## சந்தேகநபர்கள் கோர்ட்டில் சரண்

சாவகச்சேரி, புதன்

மட்டுவில்தெற்கில் நாகன் சின்னத்தம்பி என்பவர் கொலையுண்டது சம்பந்தமாகச்சந்தேகத்தின்மீது பொலிசாரால் தேடப்பட்டு வந்த சுப்பன் தம்பு, தம்பு சின்னப்பு ஆகிய இருவரும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமா முன்னிலையில் புரக்டர் வி. செல்லத்தம்பிமூலம் சரணடைந்தனர். மாஜிஸ்திரேட் அவ்விருவரையும் இம்மாதம் 27ம்திகதிவரை றிமாண்டில் இருக்கும்படி கட்டளையிட்டார்.

## லாபம் 3 சதம்: அபராதம் ரூ. 150

நாவலப்பிட்டி, புதன்

பூண்டுலோயாவைச் சேர்ந்த செல்லையா தங்கராஜா என்பவர் 32 சதத்திற்கு விற்கவேண்டிய ஒரு றுத்தல் உருளைக்கிழங்கை 35 சதத்திற்கு விற்பனைசெய்ததாக பூண்டுலோயா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். டி. எஸ். ஜி. நாணயக்காராவினல் குற்றஞ்சாட்டித் தாக்கல்செய்த வழக்கில் நுவரெலியா நீதிபதி திரு. ஈ. எப். டி சில்வா எதிரிக்கு 150 ரூபா அபராதம் விதித்தார்.

## உப-தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், வியா.

ஊர்காவற்றுறைப் பட்டண சபையின் உப-தலைவர் தெரிவின் விசேஷ கூட்டம், சபைத் தலைவர் ச.ம. அல்பிறட் தலைமையில் பட்டணசபைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

3-ம் வட்டார அங்கத்தவர் பண்டிதர் க, சிவலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தேயிலை —

## தொழிற்றுறையில் கணித இயந்திரங்கள்

கொழும்பு, புதன்

தற்சமயம் பிரிட்டனுக்கு விஜயஞ்செய்திருக்கும் இலங்கை வங்கியின் நிர்வாக அதிபர்களுள் ஒருவரான திரு. எஸ். ஏ. சமரசிங்கா தேயிலை தொழிற்றுறை நிர்வாகத்தில் கணித இயந்திரங்களை உபயோகிக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்துவருகிறார்.

இங்கிலாந்தில் புறூக்பொன்ட் ஸ்தாபனத்தில் கணித இயந்திரங்கள் எவ்விதம் உபயோகிக்கப்படுகின்றன என்பதையும் இம்முறையை இலங்கையிலும் அனுஷ்டிக்கலாமா என்பதையும் நான் ஆராய்ந்துவருகிறேன் என்ருர் அவர்.

## உண்ணாவிரத நடவடிக்கை

திருக்கோணமலை, புதன்

தமிழ்பேசும் அரசாங்க பொது ஊழியர்சங்கத்தினர் வடக்கு கிழக்கிலுள்ள அரசாங்க திணைக்களங்களுக்கு முன்பாக உண்ணாவிரதமிருக்க நடவடிக்கைஎடுத்துள்ளனர். தமதுபிரச்னைகளையும், குறைகளையும் ஒருமாதகால எல்லைக்குள் தீர்த்துவைக்கத் தமிழ்த்தலைவர்கள் தவறினல், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறிவித்துள்ளனர்.

தமது சங்க செயற்குழுவின் இந்தத் தீர்மானத்தை தமிழரசுக்கட்சித் தலைவருக்கும், தமிழ் எம்.பிக்களுக்கும் கடிதம்மூலம் அறிவித்துள்ளனர்.

## நிதிமந்திரி சங்கானைக்கு விஜயம்

சங்கானை, புதன்

இன்று பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரபாடசாலைமண்டபத்தில் நடைபெறவிருக்கும் சேமிப்புவார விழாவில் கலந்துகொண்ட நிதிஅமைச்சர் யூ. பி. வன்னிநாயகா நாளை வியாழக்கிழமைகாலை சங்கானையில் உள்ளமட்கலத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு குறைபாடுகளை ஆராய்வார் எனத் தெரியவருகின்றது.

## சைவசமய முன்னேற்றச்சங்கம்

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் நடைபெற்ற சாவகச்சேரி சைவசமய முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பின்வருவோர்சபை நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. ஏ. கந்தையா, திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, தலைவர் திரு. பி. பொன்னுச்சாமி, உப தலைவர் திரு. கே. விஞசித்தம்பி, காரியதரிசி திரு. எஸ். கந்தையா, தனதிகாரி திரு. வி. தம்பிஐயா 15பேர் கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மருந்து தட்டுப்பாடு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை அரிசினர் வைத்தியசாலையில் மிக முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனல்நோயாளிகள் பெரிதும்கஷ்டப்படுகின்றனர்.

[illegible]

## கி. ச. தேர்தலுக்கான நியமனப்பத்திரம்

கோண்டாவில், புதன்,

கொக்குவில் கிராமசபையின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் மார்ச்1ல் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. கொக்குவில் கோண்டாவில் ஆகிய இருகிராமங்களையும்இக்கிராமசபை அடக்கியுள்ளது.

## எதிர்காலம்பற்றி எம்.பி.

சுழிபுரம், புதன்

''எமது எதிர் கால முன்னேற்றம் கைத்தொழில், கடற்றெழில், கமத்தொழில் ஆகியவற்றில் தங்கியுள்ளது. நாம் எமது உணவு, உடை ஆகியவற்றைப் பூர்த்தி செய்வோமானல் அதுவே ஒரு பெரும் சேவையாகும்'' என்று செம்பாட்டன் தோட்ட புதிய நெசவு நிலையத் திறப்புவிழாவில் வட்டுக் கோட்டை எம். பி அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார். விழாவிற்கு அ. சண்முகநாதன் தலைமை வகித்தார்.

## திருத்த வேலையை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர்தெற்குப்பகுதிக்கு அண்மையில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விஜயம் செய்தபோது அங்குள்ள புதிய கற்பகவிநாயகர் நெசவு நிலையத்தையும், ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாசாலையையும் பார்வையிட்டார். பாடசாலையின் திருத்த வேலைகளைப்பற்றி ஆலோசனை செய்த திரு. ஜி. ஜி. யாழ்ப்பாணத்தில் இன்னும் மாட்டுப்பண்ணைகள் போன்று பல வித்தியாசாலைகள் காட்சியளிப்பதாகவும், அவற்றின் திருத்தங்களுக்கு அரசாங்க உதவியை மட்டும் எதிர்பாராமல் பொதுமக்களும் உதவவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இப்பாடசாலையின்திருத்தவேலைகளுக்கு 3500 ரூபா அளிப்பதாக அவர் தெரிவித்தார். திரு. ஜிம்மி இராசரத்தினமும், பெற்ருேர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் திரு. ஜி.ஜி.யை வரவேற்றனர்.

## பாராட்டுவைபவம்

காரைநகர், புதன்

''இன்றுசமாதான நீதிபதிகளுக்கு எடுக்கும் இவ் விழா நீதி நிலைத்திட எடுக்கும் புனித விழாவாகும்'' என்று காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா மண்டபத்தில்சமாதான நீதிபதிகளுக்கு நடாத்தப் பெற்ற உபசரணை விழாவின் போது திரு மு ஆ. கந்தையா பேசுகையில் கூறினர்.

சமாதான நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட திருவாளர்கள் வே. சுப்பிரமணியம், சு. இராசசேகரம ஆகிய இருவரையும் பாராட்டும் முகமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம் தலைமையில் இவ் வைபவம் நடை பெற்றது.

''நாட்டின் முன்னேற்றம் மக்களின் சக்தியிலேயே தங்கிபிருக்கிறது. மக்களை உற்சாகப்படுத்த அரசாங்கம் மக்கள் நலனிற்காகப் பொதுத் துறையில்ஈடுபட்டு உழைக்கும் ஒரு சிலருக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கி வருகிறது'' என்று இலங்கைப் பல்கலைக் கழக முன்னள் விரிவுரையாளர் திரு. கு. நேசையா குறிப்பிட்டார்.

பட்டினசபை

## ஊழியர்மீது மாஜி தலைவர் வழக்கு

மாவிட்டபுரம், புதன்

சங்கானைப் பட்டினசபை ஊழியர் ஒருவர், அப்பட்டினசபையின் முன்னள்தலைவர் ஒருவரை பயமுறுத்தியதாக சங்கானைப்பொலிசார் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் ஒருவழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கில் சங்கானையைச்சேர்ந்த சரவணமுத்து அப்புராசாஎன்பவர் சென்ற ஜனவரி மாதம் முதலாம் திகதி கே. அம்பலவாணர் என்பவரை ஏசியதாகவும், பயமுறுத்தியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. எதிரி குற்றச்சாட்டிற்கு சுற்றவாளியென்று கூறவே நீதிபதி வழக்கை விசாரணைக்காக ஏப்ரல்மாதம் 3-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். எதிரி தரப்பில் திரு. சி. எஸ். நாதன் ஆஜரானர்.

## கார்—பஸ் விபத்து

சுழிபுரம், புதன்

சித்தன்கேணி சந்திக்கருகாமையில் இ.போ. ச. பஸ்சும் மோட்டார் கார் ஒன்றும் மோதிக்கொண்டதில் மோட்டார்கார் சேதத்துக்குள்ளானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய எம். பி. வரவில்லை

கொழும்பு, புதன்
வெலிமடைத் தொகுதி புதிய பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. பேர்ஸி சமரவீரா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு வரவில்லை. அவர் பதவிப் பிரமாணம் செய்யவுமில்லை.

## குற்றம் அதிகமாக செய்பவர்கள்

அச்சுவேலி, புதன்
''சமயப் பற்று அற்றவர்களே குற்றங்களை அதிகமாகச் செய்கின்றார்கள்.''

இவ்வாறு அச்சுவேலி கிராமமுன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் அச்சுவேலியில் நடைபெற்ற பொதுக் கூட்டம்ஒன்றில் காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் திரு. எஸ். மூர்த்தி குறிப்பிட்டார். மற்றும் பலரும் பேசினர்.

## சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

மாவிட்டபுரம், புதன்
இளவாலை கொலை முயற்சி வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும். இதற்கான உத்தரவை நேற்று மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா வழங்கினார்.

இவ்வழக்கில இளவாலையைச் சேர்ந்தவர்களான சூசைப்பிள்ளை என்றழைக்கப்படும் சுவாம்பிள்ளை சின்னத்தம்பி, சுவாம் பிள்ளை பொன்னு, வைத்தியாம்பிள்ளை அருளப்பு, வைத்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை ஆகியநால்வரும் அதேயிடத்தைச்சேர்ந்த சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசத்தை கத்தியால்வெட்டிக்கொலைசெய்ய முயன்றதாகச் சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## அபராதம்

மாவிட்டபுரம், புதன்
களவுபோன சைக்கிளெனத்தெரிந்தும் அதை வைத்திருந்ததாகத் தொடரப்பட்டவழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக்கண்ட மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்காஎதிரியைரூபா 150 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கில் கொக்குவிலைச்சேர்ந்த சொக்கலிங்கம் குலசேகரம் என்பவர் புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த தம்பிமுத்து சீவரத்தினம் என்பவருக்குச் சொந்தமானதும் களவுபோனதுமான சயிக்கிளை வைத்திருந்ததாகச் சுன்னாகம் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## ஆங்கில ஆசிரியர் நியமிக்கக் கோரிக்கை

உடுப்பிட்டி, புதன்
கரணவாய்தெற்கு மணியகாரன்தோட்டம் சைவ வித்தியாசாலையின் பெற்றோர்-ஆசிரியர்சங்கநிர்வாகசபைக் கூட்டம் தலைமை ஆசிரியர் திரு. சு, சுப்பையா தலைமையில் நடைபெற்றது. இப்பாடசாலையில் ஆங்கில உதவியாசிரியையாகக் கடமையாற்றிய செல்வி மங்கையர்க்கரசி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குப் பயிற்சி பெறச்சென்றமையால், காலியான அவ்விடத்திற்கு உடனடியாக ஆங்கில ஆசிரியரொருவரை நியமிக்குமாறும், அக்காலம்வரையும் மாணவர்களின் ஆங்கிலக் கல்விதடைப்படாமல் இருப்பதற்காக ஆங்கிலம் கற்பிப்பதில் தகுதிவாய்ந்த பெற்றோரொருவரைக் கொண்டு தற்காலிகமாகக் கற்பிப்பதற்காகத் தலைமையாசிரியருக்கு அனுமதி வழங்குமாறும்கோரி வடமாநில வித்தியாதிபதிக்கு மகஜர் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சந்தேகநபர் வாக்குமூலம்பதிவு

மாவிட்டபுரம், புதன்
மூளாயைச்சேர்ந்த கிட்டிணன் சிவபாக்கியம்என்னும் பெண்ணை சென்ற 13ம்திகதி இரவு படுக்கையில் வைத்து வெட்டிக் கொலை செய்ய நடைபெற்ற சதியைத் தொடர்ந்துசங்கானைபொலிசாரினால் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப் பட்டிருந்த சந்தேக நபர்களில் ஒருவரான நாகமுத்து கந்தசாமி மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்காவிற்கு சம்பவத்தைப்பற்றிஓர் இரகசிய வாக்குமூலமளித்தார்.

வாக்குமூலத்தைப் பதிவு செய்தநீதிபதி கந்தசாமியை 25ம்திகதிவரை தொடர்ந்து ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். ஏற்கனவே சிவபாக்கியத்தின் கணவன் கிட்டிணனும் ரிமாண்டில் வைக்கப் பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. வெட்டப்பட்டதாகக் கூறப்படும் பெண் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

## இடமாற்றம்

கிளிநொச்சி, புதன்
யாழ்ப்பாணம் செயலகத்தில் காணிப்பிரிவில் லிகிதராகக்கடமையாற்றிய திரு. எஸ். செல்வராசா கிளிநொச்சி காணிக்கந்தோருக்கு பிரதம லிகிதராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திரு. கே. முருகேசு சி. சண்முகம் ஆகியோரும் கிளிநொச்சி காணிக்கந்தோருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை, புதன்
ஊர்காவற்றுறை நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. ரி. ஜே. இராசரத்தினம் பதவிஉயர்வுடன் கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர்கண்டியில் உதவிமாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றுவார்.

## பிரவுபசாரம்

பண்டத்தரிப்பு, புதன்
தெல்லிப்பளை வடமேற்கு கிராம சேவையாளர் திரு. முருகையா வேறு இடத்துக்கு மாற்றப்பட்டதையொட்டி அவருக்கு பிரிவுபசாரவிழா நடைபெற்றது. இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலையில் இவ்விழா நடைபெற்றது.

## 'காலம் மாறவில்லையே'

வல்வெட்டித்துறை, செவ்.
''காலம் மாறும் எனக் காத்திருந்தோம்; மாறுவதாகத் தெரியவில்லை. ஆகையால் எமது தீண்டாமைப் போராட்டத்தை ஆரம்பிப்பதே சிறந்த மார்க்கம் எனத் தீர்மானித்திருக்கிறோம்''.

இவ்வாறு திரு. வீ. ஏ. கந்தசாமி கம்பர்மலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார். மற்றும் பலரும் பேசினர்.

## கடை தீக்கிரை

கிளிநொச்சி, புதன்
ஜெயந்திநகர் கிராமத்தில் வசிக்கும் குடியேற்றவாசியான கந்தையா பூரணம் என்னும் பெண்ணின் கடை, இரவு நேரத்தில் இனம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டதாகவும் கடையில் இருந்த பொருள்கள் எரிந்து சாம்பலாகி விட்டதாகவும் கிளிநொச்சி பொலிசில் திருமதி பூரணம் புகார் செய்துள்ளார். கிளிநொச்சி பொலிசார் இதுபற்றி விசாரணை செய்கின்றனர்.

## யாழ். ஆஸ்பத்திரி குழு நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குழு இவ்வருட நிர்வாகிகளாக டாக்டர் ஆர். கந்தையா தலைமையில் 21 பேரை சுகாதார அமைச்சர் நியமித்துள்ளார். அவர்கள் பெயர்கள் வருமாறு:- டாக்டர் வி. ரி. பசுபதி, டாக்டர் எஸ். இராஜரத்தினம், என்ஜினியர் எம். கனகசபை, திரு. எம். வைரமுத்து, திரு. கே. சோமசுந்தரம், முதலியார் சி. தியாகராஜா, முதலியார் சி. முத்துத்தம்பி, திரு. எஸ். யூ. சோமசேகரம், திரு. எஸ். சின்னத்துரை, திரு. எஸ். முத்துக்குமாரசாமி, திரு. எஸ். லோகேஸ்வரன், திரு. என். பூபாலசிங்கம், திரு. எம். கதிரவேலு, திரு. எம். பாஸ்கரதேவன், திரு. ஜேக்கப், திரு. ஜி. நல்லையா, அன்ரன் ஸி. பொன்னம்பலம், திரு. கே. சதாசிவம், திரு. பி. வன்னியசிங்கா, திரு. ஆர். தம்பையா, திரு. பி. நடராஜா. [ந. நி.]

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்.
வலிகாமம் மேற்கு கயரோக தேசிய நிவாரண சங்கப் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்- சமூகஜோதி சி. தியாகராசா, ஜே. பி., உபபோஷகர்- டாக்டர் எச். பி. செல்லையா, தலைவர்- டாக்டர் கே. சிவஞானரத்தினம், உபதலைவர்கள்- முதலியார் வி. மகேசன் ஜே. பி., திருமதி பி. ஆறுமுகம், காரியதரிசி- திரு. டபிள்யு, என். தேவகடாட்சம், தனாதிகாரி- திருமதி பேஸி அத்தனாசியார்.

கோண்டாவில், செவ்.
கோண்டாவில்கிழக்குசரஸ்வதி சனசமூகநிலையத்துடன் இந்துஇளைஞர்மன்றம் இணைந்து திரு. நா. துரைராகசேகரம் தலைமையில் புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்தது. தலைவர்திரு. பொ. சபாலிங்கம், உபதலைவர் திரு. நா. குலசேசகரம், செயலாளர் திரு. நா. துரைராசசேகரம், உபசெயலாளர் திரு. இ, றஞ்சிற், தனாதிகாரிதிரு, சு சுந்தரலிங்கம். உபதனாதிகாரி திரு. இ. உருத்திரா. 11 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## தொழிற்சங்க கிளை

யாழ்ப்பாணம், வியா.
யு. என். பி. வட பிராந்திய தொழிற் சங்கம் யாழ்ப்பாணத்தில் ஒரு நிரந்தர அலுவலகத்தை, இங்கு அமைத்துள்ளது. இவ்வலுவலகத்தை அடுத்த மாத நடுப்பகுதியில் இரு மந்திரிகள் திறந்து வைப்பரெனத்தெரிகிறது.

## வல்வெட்டித்துறை செய்திக் கடிதம்

— நமது நிருபர் வி. பழனிப்பிள்ளை —

வல்வெட்டித்துறை பெற்றோர்களுக்கோர் பெருங்குறை. தங்கள் பெண்பிள்ளைகளை அனுப்புவதற்கு ஒரு மகளிர் கல்லூரியில்லையென்ற தமது குறையை பருத்தித்துறை எம். பி. க்கும் பட்டினசபைத் தலைவருக்கும் தெரிவித்துள்ளனர். இப்போது பருத்தித்துறை, உடுப்பிட்டி போன்ற நீண்ட தூரத்திலுள்ள மகளிர் கல்லூரிகளுக்கு தங்கள் பெண்பிள்ளைகளை அனுப்புவதால், தமக்கும் பிள்ளைகளுக்கும் சிரமம் ஏற்படுவதாக புகார் கூறுகின்றனர். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும், வல்வெட்டித்துறைப் பட்டினசபைத்தலைவர் திரு. வி. எம். இரத்தினவடிவேலுவும் நடவடிக்கைஎடுப்பதாக உறுதி கூறியிருக்கின்றனர்.

### பக்தர்கள் கஷ்டம்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயிலுக்கு சைக்கிளில்வரும் பக்தர்களின் சைக்கிள்கள் திருட்டுப் போய்விடுகிறதாம். வல்வெட்டித்துறைப் பொலிசாரிடம் இதுபற்றி பல புகார்கள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்களைக் கண்டுபிடிக்கும் வேட்டையில் பொலிசார் தீவிரமாக இப்போதுஈடுபட்டுள்ளனர்.

### வாலிபர்களின் குறை

வல்வெட்டியிலுள்ள பிரதான வீதியில் அப்பகுதி வாலிபர்கள் கூட்டம் கூட்டமாக நிற்பதைச் சென்ற சில காலமாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. அதிகமாக மாலை நேரத்தில் இந்தக்காட்சியைப் பார்க்கலாம். இப்பகுதியில் நிரந்தரமான வாசிகசாலையில்லாததே இதற்குக்காரணம் என்று புகார்சொல்லப்படுகிறது. இங்குள்ள பாடசாலை ஒன்றிலே தற்காலிகமாக வாசிகசாலை இயங்குகிறது, வாலிபர்களுக்கான இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்குஅப்பகுதிப் பெரியவர்கள்உதவிசெய்கிறார்களில்லையென்று வாலிபர்கள்குறைப்படுவதாகத் தெரிகிறது,

### தொழிற்சாலை உருவாகும்?

வல்வெட்டித்துறைப் பகுதியில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைகொடுக்க இப்பகுதி தனவந்தர்கள் சிலர் முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. கைத்தொழிற்சாலையொன்று இங்கு உருவாக்கி, படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைகொடுக்க இந்தத் தனவந்தர்கள் செய்யும் முயற்சிக்கு அரசாங்கமும் உதவியளிக்கலாமென்று முயற்சியிலீடுபட்டிருக்கும் ஒருவர் தெரிவித்தார்.

### தட்டுப்பாடு இல்லை

வல்வெட்டித்துறையில் இப்போது தட்டுப்பாடு இல்லை. முன்னர் இருந்துவந்த மல்லி, மிளகாய், மாவு தட்டுப்பாடு எதுவும் இல்லை. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகளில் கூப்பனுக்கு இவைகள் வழங்கப்படுகின்றன,

### நடவடிக்கை எடுப்பார்களா?

வல்வெட்டித்துறை, ஊறணி கடற்கரை வழியாக உள்ள பிரதான வீதியில் செல்வதே நரகவேதனையாக இருக்கிறது. நாற்றம் தாங்கமுடியவில்லை. வீதிக்கு அருகிலேயே அழுக்குப் பொருட்களை மலசலகூட ஊழியர்கள் புதைத்துவிடுகிறார்களாம். இதுபற்றிப் பொதுமக்கள் வல்வெட்டித்துறைப் பட்டினசபைக்குப் புகார் செய்திருப்பதாகவும் தெரிகிறது.

### சுங்க இலாகா எங்கே?

வல்வெட்டித்துறை சுங்கப்பகுதி எங்கேயிருக்கிறது என்று சுலபமாக யாராலும் கண்டுபிடித்துக் கொள்ளமுடியாது சுங்கப்பகுதி இங்கேதானிருக்கிறது என்பதைக் காட்டுவதற்கான பெயர்ப்பலகை இல்லாததால் பலருக்கும் சுங்க இலாகாவைக் கண்டுபிடிப்பது பெருத்த கஷ்டமாக இருக்கிறது. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன்அபயசேகரா, வல்வெட்டித்துறைக்கு உத்தியோகபூர்வமாக சமீபத்தில் விஜயம்செய்தபோது, சுங்க இலாகாவைக் கண்டுபிடிக்க முடியாமல் சிலநிமிடநேரம் திண்டாடவேண்டியிருந்ததாம்.

## பாடசாலைகளில் உப உணவுப் பயிர்

பண்டத்தரிப்பு, புதன்
அரசாங்கத்தின் அதிக உணவு பயிரிடுகை இயக்கத்தை ஆதரித்து இங்குள்ள பல பாடசாலைகளிலும் உப உணவுபயிர்கள் பயிரிடப்படுகின்றன. வாழை, மிளகாய், கத்தரி போன்ற பயிர்கள் பாடசாலைக்காணிகளில் பயிரிடப்படுகின்றன.


## இந்தப் பையன்களுக்கு நல்ல வருங்காலமுண்டு



ஒருநாள் அவர்கள் பெரியவர்களாவார்கள். நீங்கள் அவர்களுக்குத திட்டமிட்டுள்ள பெருஞ் செயல்களைச் செய்து முடிக்க அவர்களுக்குச சுகமும பலமும அவசியம். செவன் சீஸ் கொட்லிவர் எண்ணெய் இதற்கு ஏற்றது. டாக்டர்களைக கேட்டால் சிறுவர்களின் உடம்பை வளர்ப்பதில் இது பிரசித்தி பெற்றதென்று சொல்வார்கள். உச்ச சக்தியூட்டும எண்ணெய் வகைகளில் விட்டமின் ஏ., டி., ஆதியன கொண்டது இது. இருமல், தடிமன ஆகியவற்றை அண்டவிடாது தடுக்கிறது. உங்கள் குழந்தைகளின் சுகத்தை தினமும் செவன் சீஸ் கொண்டு போஷியுங்கள். இன்றே ஆரம்பியுங்கள்.



செழுமை மிகக பொன் நிற கொட்லிவர் எண்ணெயும் குளிகைகளும்.

செவன்சீஸ்

... சொந்தப் போத்தலிலேயே ... உங்களுக்கு வழங்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கவனத்திற்கு

15-2-67 புதன்கிழமை காலை சாவகச்சேரி தபாற்கந்தோரில் என்னிடமிருந்து ''பார்க்கர் பால் பொயின்ட்'' பேனையை இரவலாக வாங்கியபின் மறதியாகக் கொண்டுசென்ற அன்பர் தயவுசெய்து சாவகச்சேரி வேல் சினிமாவில்ஒப்படைக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றார்.

2449 த. நடராசா.

### ஏலவிற்பனவு

வலிகாமம் கிழக்கு கூட்டுறவுச் சங்கச் சமாசம், நீர்வேலிக் காரியாலயத்தில் 25-2-67 சனிக்கிழமை மு. ப. 11 மணியளவில், வெற்றுச்சாக்குகள், வெற்றுத்தகரங்கள் முதலியன ஏலத்தில் விற்கப்படும்.

க. வீ. கனகசபாபதி,
2447 தலைவர்.

WANTED
A MALE CLERK

Pass in S S C. or equivalent Exam. with English Knowledge of typewriting and Book-keeping.

Office Experience and Co-operative Training preferred.

Age 26 - 35.

Salary: 100/- — 175/- / 7/50 × 10 with allowance prescribed by the Union

Total initial earnings-
100/+101/60+17/50=219/10

If selected security in cash Rs. 000/-.

Applications close on 9-3-67

*Application for Clerk should appear on the top left hand corner of the envelope

Apply under registered cover with two recent testimonials

President.
Vali West M P.C S Union
Chankanai.
2444

REGAL - JAFFNA
NOW SHOWING
Chaplin, Keaton, Laurel, Hardy & Langdon
in
30 YEARS OF FUN


## ''அகங்காரம் அழியட்டும்''

நாவலப்பிட்டி, புதன்

''நான் என்ற அகங்காரம்நீங்கினுல்தான் இறைவன்நினைப்பு உண்டாகும். அகங்காரம் அடங்கினுலே, ஓங்காரத்துட்பொருளாகிய முருகன்திருவருளைப் பெறலாம். ஆறுபடை வீடுடைய முருகன் திருவடியைப்பெறும் பாய்க்கியம், அவனிடம் நாம்வைக்கும் பக்தியின் வாயிலாகக் கிடைக்கும்'' என்று மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய உற்சவத்தில் நடைபெற்றுவரும் கந்தபுராண விரிவுரையில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் பேசுகையில் கூறினுர்.

## தபால் விநியோக சீர்கேடு

நாரந்தனை, புதன்

நாரந்தனைப்பகுதியைச் சேர்ந்த சூரியவத்தை என்ற வட்டாரத்தில்தபால் விநியோகம் பெரும் சீர்கேடடைந்துள்ளது. இங்குள்ளவர்களுக்கு வரும் தபால்கள் உரியவர்களிடம் சேர்க்கப் படுவதில்லையாம்.

## நன்கொடைப் பணம் கிடைக்கவில்லை

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபைக்குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கு 1966ம் ஆண்டுக்குரிய நன்கொடைப்பணம் இதுவரை வழங்கப்படவில்லை.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
ஆண்டவன் கட்டளை

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
BRETT HALSEY
as Secret Agent 077
in
Espionage in Lisbon


## யூனியனுக்கு இனிங்ஸ் வெற்றி

குரும்பசிட்டி, புதன்

கொக்குவில் இந்துக்கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே வார இறுதியில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஓர் இன்னிங்ஸ் 22 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## டைகர்ஸ் வென்றது

கோண்டாவில், புதன்.

கோண்டாவில், இந்து இளைஞர்கழகத்துக்கும்டைகர்ஸ் கிளப்புக்குமிடையே நடந்த பாட்மின்ரன்போட்டியில் டைகர்ஸ்கிளப் 5-2 ஆட்டங்களால் இளைஞர் கழகக்கோஷ்டியைத் தோற்கடித்தது.

## உதைபந்தாட்ட 'விருந்து'

குரும்பசிட்டி, புதன்

பாங்கொக்நகரில் நடைபெறவிருக்கும் ஐந்தாவது ஆசிய இளைஞர் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கைக் கோஷ்டிக்கானபயிற்சி யாழ். நகரில் அளிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அடுத்தமாதம் 11ந்திகதிஆரம்பமாகஇருக்கும்பயிற்சி முகாம் ஒருவார காலம் தொடர்ந்து நடைபெறும். பயிற்சியில் ஈடுபட முன்னர் இலங்கைத் தெரிவுக்கோஷ்டி யாழ்ப்பாணம் தெரிவுக்கோஷ்டியுடன் 10ந்திகதி சிநேக பூர்வமான உதைபந்தாட்டத்தில் கலந்துகொள்ளும்.

## இருளடையும் ஆலயங்கள்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் உள்ள ஆலயங்களுக்குப் பட்டின சபையால் இலவசமாகப் போடப்பட்டு வந்த மின்சாரபல்ப் கடந்த சிலமாதங்களாகப் போடப்படாததால் இதுகுறித்துப் பொதுமக்கள் புகார் செய்துள்ளனர். இதனுல் ஏராளமான கோவில்கள் இருட்டில்மூழ்கியுள்ளன.

## பாவனைக்கு உதவாத அரிசி

சங்கானை, புதன்

வலி- மேற்கு கூட்டுறவுச் சமாசத்தினரால் இந்தக் கிழமை கூப்பன் கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ள அரிசி, புளுக் கூடுநிறைந்து பாவனைக்குதவாததாக உள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

நாரந்தனை, புதன்

புங்குடுதீவு சைவகலாசங்கத்தினர் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் கூடிய போது பின்வருவோர் பல்வேறு குழுக்களுக்கும் புதிய பொறுப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

நிதிக்குழுப் பொறுப்பாளர் திரு. க. செல்வத்துரை, மலர்க்குழு-வித்துவான் சி. ஆறுமுகம், வரவேற்புக்குழு - திரு. மு. இராமலிங்கம், விருந்துபசரணைக்குழு - திரு. சு. வில்வரத்தினம், ஆண் தொண்டர்படை - திரு. அ. க. கந்தையா, பெண்தொண்டர் படை - திருமதி மகாலட்சுமி [illegible] லிங்கமும்.

## தேசிய ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

பாஷையூர் புனித அந்தோனியார் சிறகுவலைச் சங்கத்தினர், ஐக்கிய தேசியக்கட்சியின் கீழ் இயங்கும் தேசிய சங்கத்தில்சேர தீர்மானித்துள்ளனர். இது சம்பந்தமாக 'ஸ்ரீ கோதா'விலுள்ள தாய்ச்சங்கத்திலிருந்து 3 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

## அரசாங்கம் உதவியளிக்குமா?

வல்வெட்டித்துறை, புதன்

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குப் பலகாலமாக பெருத்த நஷ்டம் ஒன்று ஏற்பட்டுவருகிறது. இதனைப் போக்க அரசாங்கம் முன்வருமா என்று விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர். பெய்யும்மழையைக் குளங்களில் தேக்கிவைப்பதற்கு அரசாங்கம் உதவி செய்தால் இந்த விவசாயிகளின் நஷ்டத்தைப்போக்கலாம். இப்பொழுது இப்பகுதியில்பெய்யும்மழைநீர் மண்டால்மலை, நாவற்குழி, வல்லை முதலிய வாய்க்கால்களூக்கூடாக தொண்டமனுறு உப்புநீருடன் கலந்து 50,000 ஏக்கர் செய்கை நிலத்தை நாசமாக்கி வருகிறதாம்.

## ''சமாதானம் நிலவவேண்டும்''

வெள்ளவத்தை, செவ்.

''உலகத்தின் அமைதிக்கு ஒவ்வொரு நாட்டு மக்களிடையேயும் சமாதானமும் அன்பும் பரிணமிக்க வேண்டும்'' என்றுவெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற பஹாய் இயக்கக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட டாக்டர் திரு. சமந்தாரி பேசுகையில் கூறினுர். இலங்கை பஹாய் இயக்க தேசீய ஞானசபையின் அங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் மலேசியப் பிரதிநிதி திரு ஜின். ஹொன்சூ உட்படப் பலர் பேசினர்.


### விற்பனைக்கு

டயர்கள்

''பயர்ஸ்ரோன்'' 750/20-12 PLY, 520-13, டயர்கள் முற்பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1567

தட்டச்சு யந்திரம்

உடன் கொண்டு செல்லக்கூடிய ஆங்கில தட்டெழுத்து யந்திரம் [அண்டவூட்டைப்ரைட்டர்] விற்பனைக்குண்டு. கீழ்க்கண்ட விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். நிர். 27, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1566

காணி

சாவகச்சேரியிலிருந்து 1 1/2 மைலுள் கச்சாய் ரேட்டில் பரப்பு ரூபா 600 கேள்வியில் 35 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பியோர் பகுதியாகவும் வாங்கலாம். க. தம்பு, மீசாலை கிழக்கு, மீசாலை. 1556

### வாடகைக்கு

கடை

காங்கேசன்துறை வீதியில் சுன்னுகம் யூனியனுக்கு முன்பாக உள்ள கடைக் கட்டிடம் வாடகைக்கு விடப்படும். மின்சார வசதியுண்டு. விபரங்கட்கு S. அல்பிறெட், 'சீலஇல்லம்', மல்லாகம். 1564


### தேவை

ருன்ஸ்போமர்

நல்ல நிலைமையில் உள்ள [Welding transformer] ஒன்று தேவை. 100இல் இருந்து 300 வரைக்கும் உள்ள அம்பியர்ஸ் [A. M. P.] விரும்பத்தக்கது. S. அந்தோனிப்பிள்ளை, 41, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 1563

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

துணுக்காய் கிராமமுன்னேற்றச்சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும், அவரது பாரியாரும், காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினமும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட படம்.


நவா
கொம்பனித்தெரு
இங்ஸ்லி கொழும்பு · பிளாஸா வெள்ளவத்தை · வெலிங்டன் யாழ்ப்பாணம்
3வது வெற்றி வாரம்!
விஜயா மட்டக்களப்பு · ஸ்ரீ கிருஷ்ண திருமலை · விஜிதா ஹட்டன்
அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை
கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட
அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, -எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்
காக்கும் கரங்கள்

க. பொ. த. பரீட்சை
வினு - விடை அடங்கிய
கணக்கியல் புத்தகம்
அச்சிட்டு விற்பனையாகிறது.
விலை ரூ. 4-00 தபாற்செலவு தனி.
கிடைக்குமிடம்:
வர்த்தக கலாசாலை,
230, கே. கே. எஸ். ரேட், — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | மொத்த ஸ்தானங்கள் | காங்கிரஸ் | மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | வலதுசாரி கம்யூனிஸ்ட் | ஜனசங் | சுதந்திரா | தி. மு. க. | முஸ்லிம் லீக் | சம்யுக்த சோஷலிஸ்ட் | பிரஜா சோஷலிஸ்ட் | குடியரசு | அகாலிதள பத்தேசிங் | அகாலிதள தாராசிங் கட்சி | போர்வார்ட் புளாக் | உதிரி கட்சிகள் | சுயேச்சை | சர்வகட்சி மலைத்தலைவர்கள் | வெளிவந்த கட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 234 | | | | | | | | | | | | | | | | | |
| கேரளம் | 133 | 07 | 69 | 09 | | | | 06 | 12 | | | | | | | 9 | | |
| மைசூர் | 216 | 44 | | 01 | 02 | 03 | | | 02 | 03 | | | | | | 11 | | |
| ஆந்திரா | 287 | | | | | | | | | | | | | | | | | |
| மத். பிரதேசம் | 296 | 94 | | 01 | 42 | 03 | | | 07 | 02 | | | | | | 7 | | |
| ராஜஸ்தான் | 184 | 47 | | | 13 | 17 | | | 03 | | | | | | | 6 | | |
| உத். பிரதேசம் | 425 | | | | | | | | | | | | | | | | | |
| மே. வங்காளம் | 280 | 45 | 03 | 05 | | | | | 03 | 2 | | | | 4 | | 10 | | |
| பஞ்சாப் | 104 | 25 | | 01 | 06 | | | | | | 2 | 10 | | | | 4 | | |
| ஹரியானா | 81 | 17 | | 01 | 06 | 01 | | | | | | | | | | | | |
| பீகார் | 318 | | | | | | | | | | | | | | | | | |
| அஸ்ஸாம் | 126 | 05 | | | | | | | | | | | | | | 1 | 5 | |
| திரிபுரா | | 22 | | 01 | | | | | | | | | | | | | | |
| காஷ்மீர் | 75 | | | | | | | | | | | | | | | | | |
| குஜராத் | 168 | | | | | | | | | | | | | | | | | |
| மகாராஷ்டிரம் | 270 | | | | | | | | | | | | | | | | | |
| ஒரிஸா | 140 | 8 | | | 6 | | | | 1 | | 1 | | | | | 8 | | |

# கட்டாய நாடுகடத்தல் இல்லை: பிரதமர் விளக்கம்

## ''இப்போது வற்புறுத்துவோர் ஒப்பந்தத்தில் ஏன் சேர்க்கவில்லை''

கொழும்பு, செவ்வாய்

**இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரைக் கட்டாயமாக நாடுகடத்துவதென்பது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் நோக்கத்துக்கே மாறுகும் என்று பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினர்.**

**இலங்கை-இந்திய ஒப்பந்தஅமுல் மசோதாமீதான விவாதத்தை அரசாங்க தரப்பில் முடித்து வைத்து பிரதம மந்திரி பேசுகையிலேயே மேற்கண்ட கருத்தைக் கூறினர்.**

ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு இரண்டு நாடுகளுமே கடமைப்பட்டிருக்கின்றன. 5 லட்சத்து 25 ஆயிரம் இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமையளித்து இந்தியாவுக்கு அழைத்துக்கொள்ளவேண்டியது இந்தியாவின் பொறுப்பு, 3 லட்சம் பேருக்கு பிரஜாவுரிமை கொடுப்பது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு. இந்த நிலைமையில் கட்டாய நாடுகடத்தலுக்கு அவசியமே இல்லை. என்று பிரதம மந்திரி கூறினர்.

எதிர்கட்சித்தலைவி திருமதி பண்டாரநாயகாவைப் பார்த்து பிரதம மந்திரி பின்வருமாறு கூறினர்:

''கட்டாய நாடுகடத்தல் பற்றி மிகவும் அக்கறை காட்டுகிறீர்கள். ஒப்பந்தம் செய்துகொண்டபொழுது அந்த அம்சத்தையும் அதில் சேர்த்துக்கொள்ளும்படி நீங்கள் ஏன் திரு. சாஸ்திரியைக்கேட்கவில்லை. அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று உங்களுக்குத்தெரியும், இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளவே அவர்கள் சம்மதித்திருக்கமாட்டார்கள். அதனுல் நீங்கள் அந்த விஷயத்தை தட்டிக்கழித்துவிட்டு இப்போது அக்கறை காட்டுகிறீர்கள்.''

### தொண்டமானுக்கு பாராட்டு

பிரதமமந்திரிதொடர்ந்து பேசியபோது. ஒப்பந்தம் அமுலாவதற்கு எல்லா அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்றூர். தோட்டத் தொழிலாளர்களை பிரஜாவுரிமை பெறுவதற்கும் இந்திய பிரஜாவுரிமை பெறுவதற்கும் மனுக்கள் போட ஆயத்தமாகும்படி கேட்டுக்கொண்டிருப்பதற்காக பிரதமர் தொண்டமானைப் பாராட்டினர்.


விற்பனைக்கு

திராட்சைக் கன்றுகள்.

உலககீர்த்தி பெற்ற தித்திப்பான வகைகள் அல்பொன்சே லவலீ, டற்றியடி பேருத், டச்செஸ், கோல்டின் மஸ்கற், நியாகரு, ரூயல் அஸ்கொற், செனெகா, சேவே வில்லாட் வல்தம் குரூஸ், சான்ரே கறன்ற். ரூபா 5. 2, ஒல்ட்பாக் வீதி, யாழ்ப்பாணம். 1568


## 40 அதிகப்படியான வாக்குகளால்நிறைவேறியது

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் 40 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது.

தமிழரசுக்கட்சி எம். பிக்கள் திரு. வி. நவரத்தினத்தைத் தவிர மற்றவர்கள் மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர். திரு. வி. நவரத்தினம் சபைக்கு வரவில்லை.

மசோதாவுக்கு சாதகமாக 87 வாக்குகளும் எதிராக 47 வாக்குகளும் பதிவாகின

## நிதிமந்திரி யாழ். விஜயம்

பலாலி, வியாழன்

நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயகா நேற்றுக் காலை 8-50 மணிக்கு பலாலி விமானநிலயத்தில்வந்திறங்கியபோது யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நிதிமந்திரியை வரவேற்றூர். வலி. வடக்குக் காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை அமைச்சருக்கு சந்தனப்பொட்டிட்டு வரவேற்றூர். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரவணமுத்து நிதிமந்திரிக்கு மலர்க்கொத்தை வழங்கி வரவேற்றூர். இதைத் தொடர்ந்து பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். செல்வரத்தினம், யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. வி. நாகலிங்கம், யாழ்ப்பாணப் பகுதி தலைமைக் காரியாலயக் காரியாதிகாரி திரு. ஆ. கந்தையா காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலதிபர் திரு. எஸ். சுப்பிரமணியம், பண்டத்தரிப்பு கிராமசபைத் தலைவர் ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர்.

நிதிமந்திரி பலாலி விமான நிலயத்திலிருந்து பலாலி மயிலிட்டி ஊடாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வாடிவீட்டுக்கு அழைத்துச்செல்லப் பட்டார். பின்னர் அவர் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையைப் பார்வையிட்டார்.

நிதிமந்திரியுடன் அதே விமானத்தில் உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. கே. பி. இரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரும் விமானத்தில் வந்திருந்தனர்.

## 15 ஆண்டுகளில் அமுல்செய்வது சாத்தியமா?

பிரதம மந்திரி இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதா மீது மேலும் பேசியபோது ஒப்பந்தத்தை 15 ஆண்டுகளில் இலங்கையினுல் நிறைவேற்ற முடியுமா என்பது குறித்து சந்தேகம் தெரிவித்தார் ஒப்பந்தத்தின்படி ஒருநாட்டை விட்டுச்செல்லும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டால் 5 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கும் 500 கோடி ரூபாய் தேவைப்படும். இலங்கை உணவுப் பிரச்னையை சமாளிப்பதற்கே பெரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் இதனை எப்படி சமாளிக்க முடியும். இது வெற்றிபெறுவது கிடைக்கக்கூடிய வெளிநாட்டு செலாவணி வசதிகளில் தங்கியிருக்கிறது.

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சனசபாவின் 16-வது ஆண்டு இசைவிழா ஏப்ரல் மாதம் 19-ந் திகதி தொடக்கம் 27-ந்திகதி வரையும் நடைபெறும்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org